


**02.12. 2024**

## தலைப்புச் செய்திகள்

- நாட்டு மக்கள் சுகாதார வசதிகளை இலகுவாக பெறுவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- இளைஞர்கள் திறன்மேம்பாட்டுடன் ஆளுமை பெறுவதன் அவசியத்தை மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் வலியுறுத்தினார்.
- 3. ஃபென்ஜல் புயலால் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தின் பாதிப்புகளை சரிசெய்து இயல்பு நிலை விரைந்து மீட்டெடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- திருவண்ணாமலை மண் சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.
- தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் நீர்நிலைகளில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

***********

**மாண்டவியா**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில் அனைவரும் சுகாதார வசதிகளை இலகுவதாக பெறுவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2014ஆம் ஆண்டு, நாட்டில் 387 மருத்துவ கல்லூரிகள் இருந்த நிலையில், தற்போது அதன் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் ஜன் ஆரோக்கியா ஆயுஷ்மான் காப்பீட்டு திட்டம், உலகின் மிகப்பெரிய சுகாதார திட்டமாக உருவெடுத்துள்ளது என்றார்.

ஆண்டுதோறும் 5 லட்சம் ரூபாய் உச்சவரம்புடன், இத்திட்டத்தின் கீழ், 12 கோடி குடும்பங்கள் பயடைந்து வரும் நிலையில் 70 வயதிற்கு மேற்பட்டோரும் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் சுகாதார காப்பீடு வசதி பெற வகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

சிறந்த கட்டமைப்பு, திறன்மிகு பணியாளர்கள், மருத்துவ ஆய்வு, உரிய மருந்துகளின் இருப்பு, நோய் கண்டறியும் வசதிகளோடு முழுமையான

பணித்திறனுடன் சுகாதார துறை செயல்படுவதாக டாக்டர் மாண்டவியா குறிப்பிட்டார்.

***********

**பியூஷ்கோயல்**

எதிர்கால சவால்களை சமாளிக்கும் வகையில் இளைஞர்கள் திறன்மேம்பாட்டுடன் ஆளுமை பெற வேண்டியதன் அவசியத்தை மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் வலியுறுத்தினார்.

புதுதில்லியில் 29ஆவது வர்த்தக தொழில்கூட்டமைப்பு ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், விரைவான செயலாக்கம், வலிமை, பாரம்பரிய கலாச்சாரங்களை பராமரிக்கும் திறன் உள்ளிட்டவற்றோடு இந்தியா உலகளாவிய பெருமைமிகு நாடாக உருவெடுத்துள்ளது என்றார்.

காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைகள் குறித்து எடுத்துரைத்த அவர், தென்னாடுகள், அல்லது குறைவான வளர்ச்சி உடைய நாடுகளால் சுற்று சூழல் மாசு ஏற்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

நீடித்த வளர்ச்சி, முறையான விநியோக சங்கிலி, நிலையான கொள்கைகள் தொடர்பான பொறுப்புகள் அனைத்து நாடுகளுக்கும் உள்ளதால் பொதுவான அதேவேளையில் பரவலான பொறுப்புகளுடன் இவற்றை அணுக வேண்டும் என்று திரு.பியூஷ்கோயல் கேட்டுக்கொண்டார்.

***********

**அவை ஒத்திவைப்பு**

வணிக நிறுவனத்திற்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகள், சம்பல் வன்முறை சம்பவங்களில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் 5ஆவது நாளாக இன்றும் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் இப்பிரச்சனைகளை எழுப்பிய எதிர்கட்சி உறுப்பினர்கள் இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று முழக்கமிட்டனர்.

கூச்சலுக்கு இடையே கேள்வி நேரத்தை அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா நடத்த முயன்றார்.

ஆனால் அமளி தொடரவே மக்களவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைத்தார்.

மீண்டும் அவை கூடியபோது மத்திய கப்பல்துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் கடலோர கப்பல் மசோதா 2024-ஐ **அமளியின் ஊடே** தாக்கல் செய்தார்.

இந்நிலையில் அமளி தொடரவே மக்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை எதிரொலித்ததால் அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் அவையை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் நாள்முழுமைக்கும் ஒத்திவைத்தார்.

***********

**கிரிராஜ்சிங்**

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் எதிர்கட்சிகளுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லை என்றும் அவையில் அலுவல்கள் நடைபெறாமல் இருப்பது கவலை அளிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அவை அலுவல்களுக்கு ஊறுவிளைவிப்பதால் மக்களுடைய பணம் வீணாவதாக குறிப்பிட்டார்.

இதனிடையே காங்கிரஸ் தலைவர் திரு.மணீஸ் திவாரி செய்தியாளர்களிடம் பேசுகையில், எதிர்கட்சிகள் கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானங்களை அரசு ஏற்க வேண்டும் என்றும், மத்திய அரசு நாடாளுமன்றத்தில் விவாதங்களை வேண்டுமென்றே தவிர்ப்பதாகவும் குறை கூறினார்.

***********

**உடான் திட்டம்**

உடான் திட்டத்தின் கீழ் விமான சேவையில்லா 86 இடங்கள் 609 வழிதடங்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.கின்ஜரப்பு ராம் மோகன் நாயுடு மாநிலங்களவையில் எழுத்து பூர்வமான அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

21 பசுமை விமான நிலையங்களுக்கு கொள்கை அளவில் வழங்கப்பட்ட ஒப்புதலின் கீழ் 12 நிலையங்கள் செயலாக்கத்திற்கு வந்ததாக குறிப்பிட்டார்.

**எழுத்துபூர்வமான மற்றொரு பதிலில் விமான** போக்குவரத்து சந்தை பிரிவில் விரைந்து வளர்ச்சி கண்ட 3ஆவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று இத்துறையின் இணை அமைச்சர் திரு.முரளிதர் மோஹோல் மாநிலங்களவையில் குறிப்பிட்டார்.

***********

பிரதமர்

இந்நிலையில் 2002ஆம் ஆண்டு குஜராத் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை அடிப்படையாக கொண்ட The Sabarmathi Report என்ற இந்தி திரைப்படத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று நாடாளுமன்ற நூலக கட்டிடத்தில் பார்வையிடுகிறார்.

***********

திரிபாதி

இந்திய கடற்படையில் அடுத்த 10 ஆண்டுகளில் 96 கப்பல்களும், நீர்மூழ்கிகளும் இணைக்கப்படும் என்று கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 62 கப்பல்கள் மற்றும் ஒரு நீர்மூழ்கி கப்பல் தற்போது கட்டமைக்கப்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

ஆண்டுதோறும், ஒவ்வொரு கப்பலாக கடற்படைக்குள் இணைக்கப்படும் என்று கூறிய அவர், நாளை மறுநாள் ஒடிசா மாநிலம் பூரியில் நடைபெறும் கடற்படை தினத்தில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு சிறப்பு விருந்தினராக பங்கேற்பார் என்றார்.

அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்கள் அனைத்தையும் எதிர்கொள்ளும் திறனுடன் இந்தியா தயார்நிலையில் இருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அண்மையில் ஐ.என்.எஸ். அரிகாட்டிலிருந்து நடைபெற்ற அணுசக்தி திறன்வாய்ந்த ஏவுகணை பரிசோதனை வெற்றிகரமாக அமைந்ததாக எடுத்துரைத்தார்.

இந்நிலையில் கடற்படை சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பயணிக்கும் 13 நாள் இருசக்கர வாகன பேரணி நாளை மறுநாள் தொடங்குகிறது.

புதுச்சேரி, திருச்சி, தஞ்சாவூர் கும்பகோணம் காரைக்குடி, தனுஷ்கோடி, ராமேஸ்வரம், மதுரை, கொடைக்கானல், கோவை, சேலம் வேலூர் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு இப்பேரணி பயணிக்கின்றது.

***********

**முதலமைச்சர்**

தமிழகத்தில் ஃபென்ஜல் புயலால் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தின் பாதிப்புகளை சரிசெய்து இயல்பு நிலையை விரைவில் மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதி கனமழைக்கு பாதிப்புக்குள்ளான கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் மீட்பு பணிகளின் முன்னேற்றம் குறித்து சென்னை தலைமை செயலகத்தில் காணொலி மூலம் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர்,, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை செய்து தரவும் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு அமைச்சர் திரு. முத்துசாமியும்,

தர்மபுரிக்கு அமைச்சர் திரு.ராஜேந்திரனும் மீட்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட அனுப்பப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதனிடையே முதலமைச்சர் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து விழுப்புரம் மாவட்டத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டு பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

***********

**திருவண்ணாமலை மண் சரிவு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் மண் சரிவு ஏற்பட்டு பாறைகள் உருண்டு வீடுகளின் மீது விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனிடையே மீட்பு பணிகளை பார்வையிட்ட மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு மண் சரிவில் சிக்கிகொண்டவர்களை விரைந்து மீட்க சென்னை ஐஐடி தொழில்நுட்ப பேராசிரியர்கள் ஈடுபடுத்தப்படுவதாக கூறினார்.

அப்பகுதி பாறைகளை உடைத்தெடுக்கும் வல்லுநர் குழு ஏற்காட்டில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மண் சரிவு இடர்பாடுகளில் 7 பேர் சிக்கியிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே மீட்பு பணிகள் குறித்து எமது திருவண்ணாமலை செய்தியாளர் தெரிவிக்கையில்:

**வாய்ஸ்**

***********

**வானிலை**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதாலும், ஃபென்ஜல் புயல் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக இன்று வலுவிழந்து வட தமிழக உள் பகுதிகளில் நிலவுவதாலும், நீலகிரி கோவை மாவட்ட மலை பகுதிகளில் இன்று **அதி கன மழை** பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருப்பூர், தேனி திண்டுக்கல் ஈரோடு மாவட்டங்களில் **கன, மிக கனமழையும்,**

கிருஷ்ணகிரி தர்மபுரி சேலம் நாமக்கல் கரூர் திருச்சி பெரம்பலூர் மதுரை விருதுநகர் தென்காசி மாவட்டங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

***********

**நீலைநிலைகள்**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் நீர்நிலைகளில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளது.

**ராணிப்பேட்டை வேலூர் மாவட்டங்களில் பெய்த** மழையால் பாலாறு, பொன்னையாற்றிலிருந்து வாலாஜா பாலாறு அணைக்கட்டுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

எனவே பொதுமக்கள் மீன்பிடிக்கவோ, வேடிக்கை பார்க்கவோ அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா அறிவுறுத்தியுள்ளார்.

**கடலூர் மாவட்டம் தென்பெண்ணை ஆற்றில்** வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

**கள்ளக்குறிச்சி மாவட்டம் மணிமுக்தா** அணைக்கு மழைகாரணமாக நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

***********

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்டத்தில் ஆகாய கங்கை, மாசில்லா அருவி, சிற்றருவி மற்றும் புளியஞ்சோலை அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**திருச்சி மழை**

**திருச்சி உப்பிலியபுரத்தை அடுத்த** கொல்லிமலை நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கன மழையால் புளியஞ்சோலை அய்யாற்றில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

புளியஞ்சோலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் வழியோர கிராமங்களில் உள்ள நீர்நிலைகள் உயர்ந்து உபரி நீர் வழிந்தோடுகிறது.

அய்யாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளபெருக்கால் பி.மேட்டூர் களிங்கி பகுதியில் மழைநீர் செந்நிறமாக செல்வதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

இப்பகுதி ஏரி நிரம்பியுள்ளதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

***********

தர்மபுரி

தர்மபுரி மாவட்டத்தில், கனமழை காரணமாக, வத்தல்மலைக்கு செல்லும் பாலம் தண்ணீரில் அடித்துச்செல்லப்பட்டதால், 10 மலைக்கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

---- வாய்ஸ் -----

***********

**உதகை ரயில்**

கனமழை காரணமாக உதகை மேட்டுப்பாளையம் மற்றும் உதகை குன்னூர் இடையேயான மலை ரயில்சேவை இன்றும் நாளையும் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

***********

**தூத்துக்குடி**

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் நடப்பு நிதியாண்டின் நவம்பர் மாதம் வரை 27.87 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளதாக துறைமுக ஆணையத்தலைவர் திரு.சுஷாந்த் குமார் ரோஹித் தெரிவித்துள்ளார்.

இது சென்ற ஆண்டை காட்டிலும் 1.97 சதவிகித வளர்ச்சி கண்டுள்ளதாக கூறியுள்ளார்.

***********

நாகூர்

நாகை மாவட்டம் நாகூர் தர்காவின் 468 ஆம் ஆண்டு கந்தூரி விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

***********

ஹாக்கி

மஸ்கட்டில் நடைபெறும் ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா நாளை மலேசியாவை எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********